# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 020/நகராட்சி/2019**

**நாள் : 25/04/2019**

**திரு N. முருகன்,**
**மணப்பாறை.** — முறையீட்டு மனுதாரர்

**நகராட்சி ஆணையாளர்,**
**மணப்பாறை நகராட்சி,**
**மணப்பாறை.** — **எதிர் மனுதாரர்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, வாகைக்குளம் விரிவு, 20- கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு N. முருகன் அவர்களின் 08.02.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 20/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக நகராட்சி ஆணையர் சமர்ப்பித்த அறிக்கை, விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர் அளித்த வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, வாகைக்குளம் விரிவு, 20- கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு N. முருகன் என்பவர், அரசு விதிகளுக்குப் புறம்பாக நகராட்சியின் எட்டு இறைச்சிக் கடைகள் பல இலட்சங்கள் கையூட்டு பெற்றுக்கொண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டன என்றும், அக்கடைகள் நான்கு கடைகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளதுடன் இறைச்சி விற்பனை கடைகள் அல்லாமல் வேறு வகையான கடைகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்று தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார். மேலும், உரிய விசாரணை மேற்கொண்டால் கையூட்டு பெற்ற விவரம் தெரிய வரும் என்றும் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. மணப்பாறை நகராட்சிக்குச் சொந்தமான பார்க் சாலை ஆடு அடிக்கும் வளாகத்தில் 2013-ஆம் ஆண்டு எட்டு கடைகள் கட்டி முடிக்கப்பட்டன என்றும், ஒப்பந்தப்புள்ளி கோரி

நாளிதழ்களில் மூன்று முறை விளம்பரம் செய்தும், ஏலங்களில் எவரும் கலந்து கொள்ளாததால் கடைகளுக்கான முன்வைப்புத் தொகை ரூ. 1.50 லட்சத்திலிருந்து ரூ. 0.75 லட்சமாக குறைக்கப்பட்டு மீண்டும் நான்கு மற்றும் ஐந்தாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி மூலம், 2018–ஆம் ஆண்டு மன்ற அனுமதி பெற்று கடைகள் ஏலம் விடப்பட்டன என்று தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட எட்டு இறைச்சிக் கடைகளை நான்கு நபர்கள் தலா 2 கடைகள் ஏலம் எடுத்துள்ளனர். 2013–ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட கடைகள் சிதிலமடைந்திருந்த நிலையில் அக்கடைகளை தங்களது சொந்த செலவில் சீர் செய்து கொள்ள குத்தகைதாரர்கள் அனுமதி கோரியதாகவும், அனுமதி வழங்கப்படாத நிலையில் குத்தகைதாரர்கள் மேற்குறிப்பிட்ட எட்டு கடைகளை நான்கு கடைகளாக மாற்றி அமைத்து விட்டனர் என்று நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். எனவே, 12.11.2018 நாளிட்ட அறிவிப்பு எண்.28/2018/அ2–இல் மாற்றி அமைக்கப்பட்ட கடைகளை மீண்டும் பழைய நிலையிலேயே மாற்றி அமைக்கப் படவேண்டும் என்றும் தவறும் நிலையில் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் உரிமம் இரத்து செய்து மூடி முத்திரையிடப்படும் என குத்தகைதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளன என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 22.04.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. கடைகளை இடித்து மாற்றி அமைத்தது குத்தகைதாரர்களா அல்லது நகராட்சியா எனத் தனக்குத் தெரியவில்லை என்றும், மாற்றி அமைக்கப்பட்ட கடைகள் இறைச்சி விற்பனைக்கல்லாமல் மண்டிக் கடைகளாக பயன்பாட்டில் உள்ளன எனத் தெரிவித்து 09.03.2019 நாளன்று எடுக்கப்பட்ட புகைப்பட நகல்களையும் சில ஆவணங்களையும் விசாரணையின் போது சமர்ப்பித்தார். இறைச்சிக் கடைகளுக்குப் பதிலாக மண்டிக் கடைகளாக செயல்பட்டால் பண பரிமாற்றம் நடைபெறும் இடத்தில் பணம் திருடு போவதற்கு வாய்ப்புள்ளதுடன் பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகும் என்றும் விசாரணையின் போது தெரிவித்தார். எனவே, இறைச்சிக் கடைகள் செயல்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மணப்பாறை நகராட்சியில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் எந்தவித தகவல்களும் தருவதில்லை என்றும் அப்படியே தந்தாலும் தவறான தகவல்களையே தருகின்றனர் என்று தனது ஆதங்கத்தினையும் விசாரணையின் போது வெளிப்படுத்தினார். கடைகள் குத்தகைக்கு விடும்பொழுது ஆணையருக்கு 7 இலட்சங்கள் கையூட்டாக வழங்கப்பட்டன என்று தனது மனுவில் தெரிவித்ததற்கு சாட்சிகள் ஏதும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

4. நகராட்சிக்கு சொந்தமான எட்டு கடைகள் பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. எட்டு கடைகளை ஏலம் எடுத்த நான்கு குத்தகைதாரர்கள் அக்கடைகளை நான்கு கடைகளாக மாற்றி அமைத்துள்ளது தெரிய வருகிறது. எனவே, அக்கடைகளை மீண்டும் பழைய நிலையிலேயே மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று 15 நாட்கள் கால அவகாசம் வழங்கி, 12.11.2018 நாளிட்ட அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, மீண்டும் அக்கடைகளை பழைய நிலைக்கே மாற்றி அமைப்பதுடன், எவ்வகை வணிகப்பயன்பாட்டிற்காக குத்தகை வழங்கப்பட்டதோ அவ்வகைப் பயன்பாட்டிற்கல்லாமல் பிறவகைப் பயன்பாட்டிற்கு அனுமதிக்கலாகாது என அறிவுறுத்தப்படுகிறது. மேலும், கடைகளை மறுசீரமைப்பு செய்து பழைய நிலைக்கு மாற்றி அமைக்கவும் உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது. கடைகளை குத்தகைக்கு விடுவதற்கு ரூ.7 லட்சம் கையூட்டு வழங்கப்பட்டுள்ளது என்று முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆனால், மேற்குறிப்பிட்ட தொகை எப்பொழுது யாரால் வழங்கப்பட்டது போன்ற விவரங்கள் எதுவும் தெரிவிக்காமல் பொத்தாம் பொதுவான குற்றச்சாட்டினை ஆணையர் மீது தெரிவித்துள்ளார். இதுபோன்று

ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து நகராட்சி அலுவலர்களை மன உளைச்சலுக்கு உட்படுத்துவது மிகவும் கண்டிக்கத் தக்கது இதுபோன்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைத் தவிர்க்குமாறு மனுதாரருக்கு கண்டிப்புடன்தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019—ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 25—ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

24.4.19

29/4/19

பெறுநர்

1. திரு N. முருகன்,
எண்.20, வாகைக் குளம் விரிவு
மணப்பாறை,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
மணப்பாறை நகராட்சி,
மணப்பாறை,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி